விவசாயிகளுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தருவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப்பெருக்குவதிலும், விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதிலும், தமிழகஅரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. மத்திய அரசுடன் முதலமைச்சரும், நானும், மின்சாரத்துறை அமைச்சரும் கடன்சுமை குறைப்பு பற்றியும் அண்மையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்துள்ளோம். அவற்றைத் தொடர்ந்து வற்புறுத்துவோம்.

விவசாயிகட்கு மேலும் சில சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்துள்ளதை அறிவிக்க விரும்புகிறேன். 1976 முதல் விதிக்கப்பட்ட தனித் தண்ணீர் தீர்வையை அரசு வசூலிப்பதில்லையென்றும், அத்தீர்வையைக் கைவிடுவதென்றும் முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, அரசின் பாசன வசதி பெறும் விவசாயிகட்கு தீர்வை குறைப்பு ஏற்படும்; சலுகையின் பலன் சுமார் ரூபாய் இரண்டு கோடியாகும்.

அரசின் பாசன வசதி பெறாத விவசாயிகட்கும் சலுகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. மின்சார மீட்டர் மாதக் கட்டணத்தை ரூபாய் ஐந்திலிருந்து ரூபாய் நான்காக இந்த அரசு குறைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதனை மீண்டும் பாதியாகக் குறைத்து மாதக் கட்டணம் இனி ரூபாய் இரண்டாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக மின் வாரியத்திற்கு சுமார் 1.75 கோடி இழப்பு ஏற்படும். புன்செய், நன்செய் விவசாயிகள் நலன் கருதி அரசு எடுத்துள்ள இம்முடிவுகளை மன்றம் வரவேற்குமென நம்புகிறேன். மத்திய அரசும், மற்ற சலுகைகள் தருவதற்கான முயற்சிகளை விரைவில் எடுக்குமென்றும் நம்புகிறேன்.

விவசாயிகள் கிளர்ச்சியின்போது கொலை, கொள்ளை, போன்ற வன்முறைச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் மீதான வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

6. தன்னிலை விளக்கம் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர்களைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்டது குறித்து.

திரு. எம். ஜே. சாதிக் பாட்சா : தங்கள் அனுமதியோடு தன்னிலை விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காப்பியில் திரு. உமாநாத் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்கும்போது நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிவிட்டு

1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

தொடர்ந்து வெளிநடப்புச் செய்தேன். அப்போது நான் இங்கிருக்கும் மேஜைகளை [* *] சொன்னதாக தாங்கள் சொன்னீர்கள். அது என்னைப்பற்றித் தவறான கருத்தை ஏற்படுத்திவிடும். என்னைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தின் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டவன். நான் அந்த வகையிலே ஒன்றும் சொல்லவில்லை. தவறான கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அந்த நேரத்தில் மிக வேகமாக பின்னாலே திரும்பி கையை உயர்த்தி **** என்று சொன்ன ஜாடையைப் பார்த்து **** என்று சொல்லியிருக்கக் கூடும் என்று கருதிச் சொன்னேன். (குறுக்கீடு) திரு. புருஷோத்தமன் எப்போதும் இதே முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார். இதை அவையாகக் கருதி மரபைக் காப்பாற்றுங்கள். திரு. சாதிக் பாட்சா பேசினார்—அதற்கு நான் விளக்கம் தருகிறேன். அதற்கிடையில் உட்கார்ந்து கொண்டே பேசுகின்ற முறையை வைத்துக் கொண்டால் அது முறையல்ல. உட்கார்ந்து கொண்டே பேசும் முறையை உறுப்பினர் மாற்றிக் கொள்ள வேண்டும்.

திரு. சாதிக் பாட்சா சொன்னதை ஏற்றுக் கொள்கிறேன். அவர் அப்படிப்பட்டவர் அல்ல. அவருக்கே இன்றைக்கு மிக்க கோபம் வந்து பின்னாலே திரும்பி அந்தச் சத்தத்தைப் பெரிதாக்கும் அளவுக்கு ஊக்கம் கொடுத்தார் என்று பார்த்து அந்த வார்த்தைகளைச் சொல்லி இருக்கக் கூடும் என்று கருதினேன்.

அவராக அப்படி (**) என்று சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். ஆகவே அதை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்றும் பத்திரிகைகளிலேயும் அது வெளிவரக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

(பிற்பகல் 12–20)

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஈ) பயிரிடுப் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்டச், முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.